Cultivation of Bamboo.

* Q. No. 339. THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :—

(a) the details of places where organised bamboo cultivation takes place in Public Sector in this State and

(b) the total area under such cultivation

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ), தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம், தர்மபுரி, கோவை: பெரியார், நீலகிரி, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சுமார் 8,660 ஹெக்டேரில் மூங்கில் வளர்க்கப்படுகிறது.

[முற்பகல் 9—10]

திரு. இராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூங்கிலை உபயோகப்படுத்துகிற இரண்டு கம்பெனிகள், ஒன்று சேஷசாயி, அடுத்தது, சவுத் இந்தியா விஸ்கோஸ். அவர்கள் தனிப்பட்ட முறையில் தாங்கள் மூங்கில் வளர்க்க வேண்டுமென்று இடங்களை, நிலங்களை அரசாங்கத்திடமிருந்து கேட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூங்கிலை மூலப்பொருளாக்கி இப்பொழுது தொழிற்சாலை நடத்துவது சேஷசாயி பேப்பர் போர்ட் நிறுவனம் தான். காகிதத்திற்குத்தான் மூங்கில் அத்தியாவசியமான மூலப் பொருளாக இருந்து வருகிறது. சவுத் இந்தியா விஸ்கோஸ் மூங்கிலை அதிகமாக அல்லது குறைந்த அளவுகூட பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. அவர்கள் யூகலிப்ட்ஸ் தைல மரங்களைத் தான் பயன்படுத்துகிறார்கள். மூங்கிலை மாத்திரமல்ல, இப்படிப்பட்ட தைல மரங்களையும், மூங்கிலையும், அவர்கள் செலவிலேயே அவர்கள் பொறுப்பிலேயே வளர்ப்பதற்கு அரசாங்கம் காலி இடங்களை ஒதுக்கித் தருமா என்று கேட்டிருக்கிறார்கள். அது ஒரு கொள்கைப் பிரச்னையாக இருப்பதாலும், அப்படி அரசாங்க நிலங்களைத் தனியாருக்குக் குத்தகை விடுவதிலே என்னென்ன சாதகபாதகங்கள் வரும் என்பதையெல்லாம் பரிசீலித்துத்தான் முடிவு கூற வேண்டியிருக்கிறது. ஆகவே, அரசு அதுபற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, மூங்கில் வளர்ப்பதில் நீலகிரி மாவட்டம் விடப்பட்டிருப்பதாக அமைச்சர் சொன்னார். நீலகிரி மாவட்டத்தில் குறிப்பாக என்னுடைய கூடலூர் தொகுதி

1981 மார்ச் 3]

யில் ஏராளமான காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகளில் மூங்கில் வளர்ப்பதில் அதிக அக்கறை காட்ட அரசு முன்வருமா? அதே நேரத்தில், அந்தக் காடுகளில் நில ஆக்கிரமிப்பு செய்தவர் களைத் தடுக்கவும் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே 621 ஹெக்டேரில் இப் பொழுது மூங்கில் வளர்ப்பதாக இங்கே தகவல் தந்திருக்கிறார் கள். இன்னும் பல தனியார் காடுகளிலே, அந்த கூடலூர் ஜென்மம் வில்லங்கத்திற்கு உட்பட்ட இடங்களிலே மிகப்பெரிய அளவிலே மூங்கில் காடுகள் இருப்பதாகத் தெரியவருகிறது. இன் னும் அப்படிப்பட்ட மலைப் பாங்கான பகுதிகளில் மூங்கில் வளர்க்க வாய்ப்பிருக்கிற காரணத்தினாலே, மூங்கில் வளர்க்கின்ற திட்டத்தை அப் பகுதிகளில் விஸ்தரிக்க வேண்டுமென்று அரசு வனத்துறைக்கு ஆலோசனை கூறியிருக்கிறது.

அந்த மூங்கில் காடுகளில் ஆக்கிரமிப்பு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் தகவல் தர வசதியாக இருக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர் களே, வட ஆற்காடு மாவட்டத்திலே மூங்கில் வளர்க்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏலகிரி, ஜவ்வாது மலைப் பகுதிகளில் ஏராளமான காலி இடங்கள் இருக்கின்றன. அங்கே அதிகமான அளவிலே மூங்கில் வளர்க்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

இரண்டாவதாக, வனத்துறையினர் ஏராளமான இடங்களிலே நீலகிரி தைல மரங்களை நட்டுவிட்டு, பல்லாண்டு காலமாகக் காவல் காத்தால்கூட, அவை சரியாக வளர்வதில்லை. அப்படிப் பட்ட இடங்களில் மூங்கிலை நட்டு வளர்க்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலை வர் அவர்களே, இந்தத் தைல மரங்கள் என்பது சம நிலப்பகுதி களில் பல இடங்களிலே நன்றாக வளரக்கூடியவை, வளர்ந்து வருகின்றது. ஆகவேதான், தைல மரங்கள் வளர்ப்பதிலே, அது வும் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாக இருக்கிற காரணத் தினாலே, அதை வளர்ப்பதிலேயே வனத்துறை அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால், மூங்கில் எல்லா இடத்திலும் வராது, வளராது. அதற்கு எப்பொழுதும் நல்ல சதுப்பு நிலப் பகுதியாக, நல்ல ஈரம் உள்ள பகுதியாக, மழை உள்ள பகுதி

யாகத் தேவைப்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நல்ல வாய்பான பகுதிகளில் மூங்கில் வளர்க்க வேண்டுமென்று 1980ஆம் ஆண்டிலேயே வனத்துறைக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது ; ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. கல்லன் : தலைவரவர்களே, நீலகிரியில் இருந்து மற்ற மாவட்டங்களுக்கு மூங்கில் கொண்டு செல்லுவதனால், இங்கே உள்ள இயற்கை வன வளங்கள் ஏற்கெனவே அழிந்து போய், மழை குறைந்து வருகிறது, அதனால் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இதைத் தடுக்க அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூங்கில் மரம் என்பது ஒரு குறிப்பிட்ட கால வளர்ச்சிக்குப் பிறகு வெட்டப்பட்டாக வேண்டும். இல்லையானால் அது தானாகவே தீப்பிடித்து எரிந்து, மற்ற காடுகளையும் அழித்துவிடும். மழை குறைகிறது என்பது அடர்ந்த காடுகளை அழிப்பதனாலேதான் மழை குறைந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள நீலகிரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட மரங்களைத் தனியார்கள் வெட்டுகிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க அரசுக்கு உதவியாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினருக்கு வனத்துறை நன்றி தெரிவிக்கும்.

குமரி முனையின் அருகிலுள்ள வட்டக் கோட்டை.

*வினா எண். 340— திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி முனையின் அருகில் உள்ள பழம்பெரும் நாகரீகச் சிறப்பை எடுத்துக்காட்டும் வட்டக்கோட்டை இப்போது மாநில அரசின் கையிலுள்ளதா ? அல்லது மத்திய அரசின் கையில் உள்ளதா ?

(ஆ) மத்திய அரசின் கையில் உள்ளது என்றால் அதனை மாநில அரசு எடுத்து சுற்றுலா வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) 1979ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி மத்திய அரசின் தொல்பொருள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) இதனை மீண்டும் திரும்பிப் பெற மாநில அரசு முடிவெடுத்துள்ளது.